## ஆய்வுச்சுருக்கம்

### முன்னுரை

இன்றைய இலக்கியம் மக்களின் வாழ்வைப் பிரதிபலிப்பதோடு சமுதாயப் பிரச்சனைகளையும் உள்ளடக்கமாகக் கொண்டுள்ளது. இருபதாம் நூற்றாண்டின் இலக்கிய வகைகளில் புதினம், சிறுகதை சிறந்து விளங்குகின்றன. நடப்பியல் உண்மை நிகழ்வுகளில் சிறிது கற்பனையைக் கலந்து படைப்பை உருவாக்குகிறார்கள். இவ்வாறு உருவாக்கப்படும் படைப்புகள் அனைத்தும் சிறப்புப் பெறுவதில்லை. ஆயினும் காலம் கடந்து வாழும் தன்மை பெற்ற, கருத்தாழம் மிக்க சிறுகதைதள், புதினங்கள் இன்றளவும் மக்களிடையே வரவேற்பைப் பெற்றிருக்கின்றன. சிறுகதை ஒரு மாளிகையின் சாளரம். முாளிகையின் மொத்தப் பரப்பும் புதினம் ஆகும் என்கிறார் ஜியார்ஜ் மூர் என்னும் அறிஞர். இவ்வாய்வு சரோஜா பாண்டியனின் சிறுகதைதள் மற்றும் புதினங்களைப் பல்வேறு கோணங்களில் ஆய்வதாக அமைகின்றன. ஆசிரியரின் படைப்புகளில் காணலாகும் சமுதாயம், பெண்ணியம், பாலியல், உளவியல் மற்றும் உறவுநிலைகள், பாத்திரப்படைப்பு, மொழிநடை, உத்தி போன்ற தன்மைகளை ஆராய்வதாக அமைகிறது.

### ஆய்வுப்பொருள்

இந்த ஆய்வேடானது "சரோஜா பாண்டியன் படைப்புகள் -- ஓர் ஆய்வு" எனும் தலைப்பினை ஆய்வுப்பொருளாகக் கொண்டு அமைந்துள்ளது.

### ஆய்வு நோக்கம்

இலக்கியங்கள் சமகால சமூகத்தைப் பதிவு செய்கின்றன. அவ்வகையில் ஆசிரியர் சரோஜா பாண்டியனும் சமூக நிலையையே தம் படைப்புகளில் எடுத்துரைத்துள்ளார். அவற்றைப் புலப்படுத்தும் விதமாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**ஆய்வு எல்லை**

படைப்பாளர் சரோஜா பாண்டியன் சிறுகதைத் தொகுப்புகள் (5), நாவல்கள் (5) பல்சுவைக் கதைகள் (மொழிபெயர்ப்பு – 1), திறனாய்வு நூலினையும் படைத்துள்ளார். ஆய்வுக்குரிய காலவரையறை மற்றும் பக்க வரையறை கருதியும் அவரது சிறுகதைத் தொகுப்புகள் (5), நாவல்கள் (5), மட்டுமே ஆய்வு எல்லைகளாக அமைந்துள்ளது.

**ஆய்வு ஆதாரங்கள்**

1. முதன்மை ஆதாரங்கள்

சிறுகதைத் தொகுப்புகள்

திருக்குறள் விளக்கக் கதைகள் (1992)

ஒரு தொடர்கதை முற்றுப் பெறுகிறது (1997)

(தமிழக அரசின் விருது பெற்ற நூல்)

டிசம்பர் 6 (1999)

நான் சீதை இல்லை (1999)

(சின்னத்திரையில் ஒளிபரப்பப்பட்ட சிறுகதை)

சாயம் பூசிக் கொண்ட மனங்கள் (2001)

நாவல்கள்

ஊரான் பிள்ளை (குறுநாவல் - 1998)

அழியாத கோபுரங்கள் (2000)

துணைதேடும் சுமை தாங்கிகள் (2000)

புரையோடிய பொன் (2004)

தொடரும் மகாபாரதம் (2006)

ஆகியவை இவ்வாய்விற்கு முதன்மை ஆதாரங்களாக இடம் பெறுகின்றன.

2. துணைமை ஆதாரங்கள்

ஆய்வுத் தொடர்பாக உள்ள இக்கால இலக்கியம், திறனாய்வு நூல்கள், திறனாய்வுக் கட்டுரைகள்,

கலைக்களஞ்சியங்கள், அகராதிகள், ஆய்வேடுகள் முதலியவை துணைமை ஆதாரங்களாக அமைந்துள்ளன.

**ஆய்வு முன்னோடிகள்**

"ஸ்டெல்லா புரூஸ் படைப்புகள் -பன்முக ஆய்வு" என்னும் தலைப்பில் ப. இளங்கோவன் (2014), "பெ. தூரன் படைப்புகளில் பன்முகப் பார்வை" என்னும் தலைப்பில் மொ. வேல்முருகன் (2017), "தி. ஜானகிராமன் படைப்புகளில் பாலியல் சிக்கல்கள்" என்னும் தலைப்பில் க. சிவனேசன் (2014) ஆகியோர் செய்துள்ள முனைவர் பட்ட ஆய்வேடு ஆய்வின் முன்னோடிகளாக எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

**ஆய்வு அணுகுமுறை**

இவ்ஆய்வில் பகுப்புமுறை, விளக்கமுறை, சமுதாய அணுகுமுறை, பெண்ணியம், பாலியல், உளவியல், ஒப்பியல் போன்ற அணுகுமுறைகள் அவ்வப் பகுதிகளுக்கேற்ப பயன்படுத்தப்பட்டுள்ளன.

**ஆய்வுப் பகுப்புமுறை**

"சரோஜா பாண்டியன் படைப்புகள் - ஓர் ஆய்வு" எனும் தலைப்பிலான இந்த ஆய்வேடு இயல்களாகப் பிரிக்கப்பட்டு ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

- முன்னுரை
- படைப்பும் படைப்பாளரும்
- சமுதாயக் கூறுகள்
- குடும்பமும் உறவுநிலைகளும்
- பாலியல் கூறுகள்
- பெண்ணியக் கூறுகள்
- உளவியல் கூறுகள்
- பாத்திரப்படைப்பு
- உத்திகள்
- மொழிநடை

- திருக்குறள் விளக்கக் கதைகள்
- முடிவுரை

முதல் இயலான முன்னுரை ஆய்வுப்பொருள், ஆய்வு நோக்கம், ஆய்வு எல்லை, ஆய்வு ஆதாரங்கள், ஆய்வு முன்னோடிகள், ஆய்வு அணுகுமுறை, ஆய்வுப் பகுப்புமுறை ஆகியவற்றைச் சுட்டுவதாக அமைகிறது.

'படைப்பும் படைப்பாளரும்' எனும் இயல் ஆசிரியரின் பிறப்பு, கல்வித்தகுதி, பணிகள், படைப்புகள், ஆர்வம், அறக்கட்டளை ,விருது, இறப்பு ஆகியவற்றை கூறுவதாக அமைகிறது.

'சமுதாயக் கூறுகள்' எனும் இயல் ஆசிரியர் சரோஜா பாண்டியன் படைப்பில் இடம்பெறும் சமூகம் சார்ந்த சிக்கல்கள் இடம் பெறுவனவாக உள்ளன. கல்வி, .திருமணம், காதல், மதம், மணமுறிவு, முதியோர், வறுமை, குழந்தைத் தொழிலாளர்கள், கந்துவட்டி, திருட்டு, வரதட்சணை, சடங்குகள், பழக்க வழக்கங்கள், மருத்துவம், நம்பிக்கைகள், பண்பாடு, நாகரிகம், மனிதநேயம், கையூட்டு, குடிப்பழக்கம், சமூகத்தால் புறக்கணிக்கப்படுவோர், அறியாமை, சாதி, உறவுகள், பாலுணர்வு, விழிப்புணர்வு ஆகியவை எடுத்துரைக்கப்பட்டு ஆராய்வதாக அமைந்துள்ளது.

'குடும்பமும் உறவுநிலைகளும்' எனும் இயல் ஆசிரியர் படைப்பிலுள்ள கதாபாத்திரங்களை குருதித் தொடர்புடைய உறவு, இரத்தத் தொடர்புடைய உறவு எனப் பகுத்தாராய்வதாக அமைகிறது. தாய் மகன் உறவு, தாய் மகள் உறவு, தந்தை மகன் உறவு, தந்தை மகள் உறவு, அண்ணன் தங்கை உறவு, அக்கா தங்கை உறவு, அண்ணன் தம்பி உறவு, அக்கா தம்பி உறவு, பாட்டி பேரன் உறவு, பாட்டி பேத்தி உறவு, குமந்தை வளர்ப்பில் பெற்றோர்ன் நிலை ஆகியவை குருதித் தொடர்புடைய உறவுகளுக்குள் உள்ளடக்கப்பட்டுள்ளது. மேலும் இரத்த

பந்தமில்லா உறவினை குடும்பம் சார்ந்தது, குடும்பம் சாராதது என வகைப்படுத்தப்ட்டு ஆராய்வதாக அமைகிறது.

‘பாலியல் கூறுகள்’ எனும் இயல் பாலியல் பலாத்காரம், பாலியலடிமைத்தனம், பாலியல் பிறழ்வுக்கான பல்வேறு காரணங்கள் பற்றி கூறுவதாக உள்ளது. மேலும் பெண் குழந்தைக்குப் பாதுகாப்பில்லாத நிலையும் அதனால் விளையும் வெறுப்பும் பற்றி ஆராய்வதாக இவ்வியல் காணப்படுகிறது.

‘பெண்ணியக் கூறுகள்’ எனும் இயல் பெண்னுரிமை, பெண்களுக்கான தடைகள், பெண்கள் சந்திக்கும் இன்னல்கள், சிக்கல்களும் தீர்வுகளும்

‘உளவியல் கூறுகள்’ எனும் இயல் குழந்தை உளவியல், மனவெழுச்சி, முதியோர் மனநிலை மற்றும் பெண்களின் மனநிலை என இவ்வியல் அமைகிறது.

‘பாத்திரப்படைப்பு’ எனும் இயல் ஆசிரியர் கதைக்கேற்ப ஆண், பெண், குழந்தை மற்றும் முதியோர் ஆகிய பாத்திரங்களை வடிவமைத்துள்ளதை ஆராய்வதாக உள்ளது.

ஆசிரியர் படைப்பை செறிவாக அமைப்பதற்காக முன்னோக்கு உத்தி, பின்னோக்கு உத்தி, பின்னணி, வர்ணனை, தொடக்கம், சிறுகதை முடிவுகள, தலைப்புப் பொருத்தம், கதைப்போக்கில் படைப்பாசிரியர் குறுக்கீடு ஆகியவை ‘உத்திகள்’ எனும் இயலில் கூறப்படுகிறது.

‘மொழிநடை’ எனும் இயல் ஆசிரியர் கதையில் காணப்படும் உவமைகள், தொன்மங்கள், பேச்சுவழக்குச் சொற்கள், ஒலிக்குறிப்பு சொற்கள், ஆங்கிலச் சொற்கள், இரட்டைக்கிளவி, அடுக்குத் தொடர், பழமொழிகள் போன்றவற்றைப் பற்றி எடுத்துரைப்பதாக அமைகிறது.

‘திருக்குறள் விளக்கக் கதைகள்’ எனும் இயல் ஆசிரியர் பள்ளிப்படிப்பு முடித்தவுடன் திருக்குறளை மையமாகக் கொண்டு படைத்தமையால் தனியாக ஆராயப்பட்டுள்ளது.

‘முடிவுரை’ எனும் இயல் இவ்வாய்வின் வழி காணலாகும் முடிவுகளைத் தொகுத்துத் தருவதாக காணப்படுகிறது.